எடுத்துக்கொண்ட பிற்பாடு அங்கு இருக்கும்படியான உத்தியோகஸ்தர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் கொடுக்கும் சலுகைகளை இன்னும் கொடுக்காததற்கு என்ன காரணம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த ஆஸ்பத்திரியை அரசாங்கம் 31—3—1958-ல் எடுத்துக் கொண்டது. அந்த ஆஸ்பத்திரியில் இருப்பவர்களை கவர்ன்மெண்ட் சர்வீஸில் சேர்கிறீர்களா அல்லது கார்ப்பொரேஷனில் இருக்கிறீர்களா என்று கேட்டபோது அவர்கள் கார்ப்பொரேஷனில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் மொத்தம் 25 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக கார்ப்பொரேஷனில் எடுத்துக்கொள்ள முடியவில்லை. இப்போது இவர்களுக்கு இருக்கிற ஸ்கேல் பிரகாரம் கார்ப்பொரேஷனில் இதற்கு ஈக்விவலெண்ட் உத்தியோகம் இல்லை. இருந்தாலும் 30—9—1959-க்குள் அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறது.

Plantation Workers' bonus dispute

*162 *Q.*—SRI N. K. PALANISAMI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

1957-58ம் ஆண்டில் மலைத் தோட்டத் தொழிலாளர்களின் போனஸ் தகராறைத் தீர்க்க அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government constituted a Tripartite Committee to evolve a formula for settlement of bonus disputes in the Plantations in the State. As a result of a series of meetings of the Bonus Committee, the issue of payment of bonus for the years 1957 and 1958 has been amicably settled.

SRI N. K. PALANISAMI : May I know the details of the settlement?

THE HON. SRI R. VENKATARAMAN : 1957, 1958 ஆகிய இரண்டு வருடங்களுக்கும் மொத்தத்தில் $7\frac{1}{2}$ சத விதம் போனஸாகக் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள். இடைக்காலமாகக் கொடுத்ததைக் கழித்து பாக்கியைக் கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

SRI J. MATHA GOWDER : 1957, 1958-ம் ஆண்டுகளுக்கு தோட்டத் தொழிலாளர்கள் விஷயத்தில் போனஸ் சம்பந்தமாக அக்ரிமெண்ட் ஆகும்போது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் அதில் இருந்தார்களல்லவா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் பழனிசாமி இல்லாமல் இருந்திருக்கலாம். கட்சித் தலைவர்கள் இருந்தார்கள் என்பதற்காக கேள்வி கேட்காமல் இருக்க முடியுமா ?

Madras City Slum Clearance Scheme

* 163 *Q.*—SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the estimated cost of Madras City Slum-clearance Scheme; and

(*b*) the loan and grant sanctioned by the Government for this Scheme in 1957, 1958 and 1959?

5th September 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The total cost of clearance improvement of slums in the Madras City is estimated at Rs. 268 lakhs.

(*b*) Loans and grants to the extent of Rs. 41;17 lakhs have been disbursed to the Madras Corporation and the City Improvement Trust during the years from 1956–57 to 1958–59 for undertaking Slum Clearance/Improvement projects as detailed below :—

	Loan. (Rs. in lakhs.)	Grant.
1956–57	0·83	..
1957–58	11·34	0·60
1958–59	26·76	1·64

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த சேரி ஒழிப்புத் திட்டத்திற்காக நமக்கு மத்திய சர்க்காரிடத்திலிருந்து ஏதாவது பணம் கிடைக்கிறதா ? பம்பாய், கல்கத்தா முதலியவைகளுக்குக் கிடைப்பதை விட சென்னைக்குக் கிடைப்பது குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுவது உண்மையா ? அப்படியானால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : 168 லட்சம் ரூபாய் இதற்காக மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிறார்கள். இது ஜனத்தொகை அளவைப் பார்த்தால் நமக்கு சற்று அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும்.

SRI K. VINAYAKAM : Sir, is it the settled policy the Government to settle these displaced slum dwellers only in the ill-fated Kodambakkam, which is notorious for many things or will the Government take interest for settling them in places like Guindy, Saidapet and Adyar?

THE HON. SRI R. VENKATARAMAN : There is a large undeveloped area in Kodambakkam. The Government have therefore acquired large areas for resettling them. In fact it is not only for resettling slum dwellers. The scheme which the Government have now proposed, viz., to acquire 320 acres in Kodambakkam will house not only slum dwellers, low income group, industrial workers as well as middle income group.

SRI K. S. G. HAJA SHERIFF : In view of this City being the capital of this State and also as this City being visited by all the Nationals of the World, will the Government consider the desirability of placing this Slum Clearance Scheme on a high priority basis and tuhs do away with slums at the earliest possible time?

THE HON. SRI R. VENKATARAMAN : The answer to the first part of the question is ' Yes. ' The highest priority has been given to the scheme. As far as the second part of the question is concerned, namely, doing away with the slums, I think it is not possible with our financial resources. There are 330 slums in the City and the improvement schemes which we have now framed are only for 33 or so. Even this would cost the Government, as I said,

[5th September 1959

168 lakhs. So the second part of the question, viz., whether the Government will be able to do away with all the slums in the City is, I am afraid, rather difficult of achievement.

Sri A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, சென்னை நகரிலே இருக்கிற இந்த ஸ்லம் கிளியரன்ஸுக்காகக் கிடைக்கிற தொகை பரிபூர்ணமாகப் பயன்படுத்தப்படுகிறதா ? அல்லது பயன்படுத்தப்படாமல் இருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் இன்னும் ஒரு வருஷம் காத்திருந்தால் இந்த சந்தேகம் இராது. ஐந்து வருஷங்களுக்குள் இந்தத் தொகையை செலவழிக்கவேண்டும். நூற்று அறுபத்தெட்டு லட்சம் ரூபாயை 5 வருஷங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இருநூற்று முப்பது லட்சம் ரூபாய் அளவுக்கு ஸ்கீம்கள் போட்டிருக்கிறோம். இந்தத் தொகை வேகமாக செலவழிக்கப்பட்டு வருகிறது.

Sri K. B. S. MANI : ஸார், இந்த ஸ்கீமுக்கு ஸ்லம் கிளியரன்ஸ் ஸ்கீம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிக வசதிகளும் சலுகைகளும் இங்கே கிடைப்பதன் காரணமாக அதிகமாக கிராமங்களிலிருந்து மக்கள் இங்கே குடியேறி இன்னும் அதிகமாக ஸ்லம்கள் உண்டாகிறதே தவிர கிளியரன்ஸ் என்பதற்கு அர்த்தமில்லாமல் இருக்கிறது. ஆகையால் '' கிளியரன்ஸ் '' என்ற வார்த்தை அர்த்தப்பட அவர்களுக்கும் மற்ற மக்கள் இருக்கும் இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினருடைய கேள்வி புரியவில்லை. சர்க்கார் ஸ்லம் கட்டிக் கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறார்களா என்று புரியவில்லை. சர்க்கார் '' கிளியரன்ஸ் ஸ்கீமில் '' செய்வதாவது, அவர்கள் நெருக்கடியான இடத்தில் இருக்கிறார்கள், அந்த நெருக்கடியைத் தவிர்க்க வேண்டும், இப்போது இருக்கிற இடத்தையே இம்ப்ரூவ் செய்தால் நெருக்கடி தீராது, ஆகையால் மேலும் சுகாதாரமற்ற இடங்களிலேயே இருக்க நேரிடும் என்று அந்த இடங்களிலிருந்து எடுத்து வேறு இடங்களில் நல்ல முறையில் அமைத்து வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

9–30 a.m. Mr. SPEAKER : இப்பொழுது கேள்வி நேரம் ஆகிவிட்டது. ஆனாலும் இன்னும் 5 கேள்விகள் இருக்கின்றன. கேள்வி கேட்டவர்களுக்கு மாத்திரம் ஒரு உப கேள்வி கேட்க அனுமதி கொடுக்கிறேன். அதற்காக இன்னும் 5 நிமிஷ நேரம் கொடுக்கிறேன்.

Bus stops

* 164 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state the result of his surprise visits to the various bus stops in the City?

The Hon. Sri R. VENKATARAMAN : A number of students specials have been introduced. These are meant exclusively for students and will operate only on working days of schools and colleges.

There has also been an increase in the turn round and operational efficiency during peak hours. Generally, a regular flow of traffic is being maintained and passengers do not have to wait for more than a few minutes at any bus stop during the peak hours in the mornings.